30th March 1954]

Mr. SPEAKER :—" We shall have it on the 1st April."

The Hon. Sri C. SUBRAMANIAM :—" It would be more convenient. We can have it on the 1st April."

Stationing of Police at Valluvakudi in Sirkali taluk.

* 552 *Q.*—Sri S. RAMALINGAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any special armed police is stationed at or near Valluvakkudi in Sirkali taluk of Tanjore district; and

(*b*) if so, the reasons therefor?

The Hon. Sri C. SUBRAMANIAM :—" (*a*) Yes, Sir.

' (*b*) It was felt necessary to do that to create a sense of security in that area."

Sri S. RAMALINGAM :—" கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லும்போது அங்குள்ளவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காகத்தான் **Special Armed Police** அங்கு கொண்டுபோய் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் அங்குள்ள விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக கொண்டுபோய் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்களா ? அல்லது அங்குள்ள மிராசுதார்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகக் கொண்டுபோய் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறார்களா ? "

The Hon. Sri C. SUBRAMANIAM :—" For the general public, Sir, which includes both agriculturists and landlords."

Sri R. KRISHNAN :—" இந்த மாதிரியாக போலீஸ் படையைக் கொண்டுபோய் நிறுத்தி வைப்பதற்கு அங்குள்ள ஜமீன்தார்களும், விவசாயிகளும் ஏதாவது தங்களுக்குள் குழப்பம் செய்துகொண்டார்களா ? "

The Hon. Sri C. SUBRAMANIAM :—" Sir, some disturbances were expected and in order to prevent any such happening, we have posted the Police there."

Sri C. MUTHIAH PILLAI :—" வள்ளுவக்குடியில் கம்யூனிஸ்ட் கட்சி 10–10
சர்க்காருக்கு எதிராகவே ஒரு போட்டி சர்க்கார் நடத்துவது அரசாங்கத்திற்குத் a.m.
தெரியுமா ? 10 மைலுக்கு அப்பால் போலீஸ் ஸ்டேஷன் இருப்பதால் அங்குள்ள மக்களின் பந்தோபஸ்துக்கே ஆபத்து ஏற்பட்டிருப்பதால் அங்கே ஒரு போலீஸ் ஸ்டேஷன் ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா ? "

The Hon. Sri C. SUBRAMANIAM :—" With reference to the allegations about the activities of the Communist Party there, all that has been taken into consideration and I do not think there is any immediate fear of any breach of the peace."

Sri M. KALYANASUNDRAM :—" ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு போலீஸ் ஸ்டேஷனை ஏற்படுத்திக்கொண்டுதான் ராஜ்யத்தை ஆளவேண்டுமென்ற வெட்ககரமான நிலைமைக்கு சர்க்கார் வந்துவிட்டால் நான் அதைப் பற்றி கவலைப்படவில்லை. தாராளமாக போலீஸ் ஸ்டேஷனை வைத்துக்கொள்ளட்டும். ஆனால் இந்த வள்ளுவக்குடியிலுள்ள விவசாயிகள் அந்தப் பிரதேசத்தில் அமைதிக்கு குந்தகமான முறையில் எந்தவித நடவடிக்கையும் எடுத்திருப்பதாக சர்க்காரால் சொல்ல முடியாது. அதற்கான புள்ளி விவரங்களையும் கொடுக்க முடியாது. அப்படியிருக்கும்போது அங்கே எஸ்.ஏ.பி.-க்களை அனுப்பி விவசாயிகளை பயமுறுத்துவதும், இம்சிப்பதும் எதற்காக ? மேலும்

அந்த விவசாயிகளைத் தொந்தரவு செய்து 'விவசாயிகள் சங்கம் ஒழிக' என்று கோஷம் செய்யவேண்டுமென அவர்களை நிர்ப்பந்தம்செய்யும் காரணமென்ன ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—"Sir, the mere fact that there had not been any breach does not prove the case that we did not apprehend it and that there was no danger of breach of the peace. The very fact that the Special Armed Police had gone there and, therefore, there was no breach of the peace cannot be used for the purpose of saying that there was no danger to the peace."

SRI S. RADHAKRISHNAN :—"அங்கு எவ்வளவு நாட்களாகப் போலீஸ் படை வைக்கப்பட்டிருக்கிறது ? தாற்காலீகமாக அவர்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கிறார்களா ? அல்லது நிரந்தரமாகவே அவர்கள் அங்கேயிருப்பார்களா ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—"That is only a temporary thing, Sir."

SRI C. MUTHIAH PILLAI :—"மார்ச்சு முப்பதாம்தேதிக்குள் தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டப்படி குத்தகை நெல் அளக்கவேண்டுமென்று இருந்தபோதிலும்கூட இன்றுவரை நெல் அளக்காமல், தானியங்களையெல்லாம் விவசாயிகள் தங்கள் வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—"As far as this question is concerned, I am not concerned with the disputes between the landlords and the agriculturists. I am concerned with the maintenance of law and order. If the hon. Member puts a separate question, I may be able to furnish the necessary information."

SRI C. H. KANARAN :—"How many were arrested? How many of them are mirasdars and how many are tenants?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—"The information I have does not reveal any arrest having been made."

SRI V. BALAKRISHNAN :—"What is the cost on this account."

MR. SPEAKER :—"The hon. Member wants to know how much the Government have spent over this?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—"It will be known only a little later."

SRI M. KALYANASUNDRAM :—"சார், விவசாயிகள் குத்தகை அளக்கவில்லை என்றால் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டப்பிரகாரம் அவர்களின்மேல் நடவடிக்கை எடுக்க வசதியிருக்கிறது. அதன்படி அவர்கள் நடவடிக்கை எடுக்காது போலீஸ் படையைக் கொண்டு விவசாயிகளின் நியாயமான உரிமைகளைக்கூட ஏன் நசுக்கவேண்டும் ? மிராசுதார்களின் நலனுக்காக எதற்காக அங்கே போலீஸ் படையைக் கொண்டுபோய் வைக்க வேண்டும் ?"

30th March 1954]

THE HON. SRI C. SUBRAMANIAM :—" In the same way, I can reply the hon. Member that the tenants and pannaiyals also, if they do not get the required wages stipulated under the Tanjore Tenants and Pannaiyal Protection Act, have got the courts wherein they could apply and got redress.

" Because we apprehended that violence would be used either by this side or that side, we have posted a unit of the Special Armed Police."

SRI P. VENKATESHA SHOLAGAR :—" சமீப காலத்தில் தஞ்சாவூர் ஜில்லாவில் இம்மாதிரி பல இடங்களில் போலீஸ் அடக்குமுறை அதிகமாகிக்கொண்டே வருகிறது. விவசாயிகளை நசுக்க சர்க்கார் போட்டிருக்கும் புதுத் திட்டமா இது என்று நான் கேட்கிறேன் ? நீடாமங்கலத்திற்குப் பக்கத்திலுள்ள ராசப்பையன் சாவடி என்கிற கிராமத்தில் . . . "

MR. SPEAKER :—" இந்தக் கேள்வி வள்ளுவக்குடியைப்பற்றியது. நீங்கள் கேட்பது வள்ளுவக்குடியைப்பற்றியதா ? "

SRI P. VENKATESHA SHOLAGAR :—" இதுவும் தஞ்சாவூர் ஜில்லாவைப் பற்றியதுதான் ? "

MR. SPEAKER :—" மூலக் கேள்வி தஞ்சாவூர் ஜில்லாவைப்பற்றியது அல்ல. கேள்வியில் குறிப்பிட்டுள்ள இடத்தைப் பற்றித்தான் பேச வேண்டும்."

SRI P. VENKATESHA SHOLAGAR :—" நான் சொல்லுவது என்னவென்றால் இதுமாதிரியாக பல இடங்களில் அடக்குமுறை நடந்துகொண்டிருக்கிறதே, இது சர்க்கார் கைக்கொண்டுள்ள புதுத் திட்டமா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" As far as the allegation of the hon. Member is concerned, the party which he represents might be able to answer his question better than myself."

SRI C. MUTHIAH PILLAI :—" சென்ற 28-ந் தேதியன்று ஒரு காங்கிரஸ் அங்கத்தினர் சார்பில் ஒரு காங்கிரஸ்காரர் சாட்சி சொன்னதற்காக கத்தியால் குத்தப்பட்ட விஷயம் கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I am sorry I do not have the information with me now. But if the hon. Member wants it, I shall try to get the information."

SRI S. SWAYAMPRAKASAM :—" Was this request to send Police bandobast made by the tenants or mirasdars or did the Government do this of their own accord? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Senior police officers in the district thought that there was likely to be disturbances and that a unit of the Special Armed Police should be posted. Government then posted a unit of Special Armed Police."

SRI S. RAMALINGAM :—" வள்ளுவக்குடியில் S.A.P. தங்குவதற்காக அங்குள்ள விவசாயிகளை வீட்டை விட்டுப் போகச்சொல்வது சர்க்காருக்குத் தெரியுமா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" No such allegation has so far been made. If any such allegation has been made, I am sure that would have been included in the question itself."

SRI K. T. RAJU :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கேள்வி ரொம்பவும் முக்கியமானது. காங்கிரஸ் பக்கத்திலிருந்து பேசும் ஒருவர் யாரோ ஒருவரை கம்யூனிஸ்டுகள் கத்தியால் குத்திவிட்டார்கள் என்று பொருள்படும் வகையில் கேள்வி கேட்கிறார்; ஆகவே 'இது எல்லாம் உண்மையா? எது உண்மை? எது பொய்?' என்றெல்லாம் எல்லோருக்கும் தெரியும்படி செய்ய இதைப்பற்றி ஒரு அரைமணி நேரம் விவாதம் செய்தால் நன்றாக இருக்கும். அதற்கு நான் தயாராகவும் இருக்கிறேன்."

SRI C. MUTHIAH PILLAI :—" அதை நாங்களும் வரவேற்கிறோம்."

MR. SPEAKER :—" On the 1st of April we will have half an hour for the previous question (Question No. 551) and half an hour for this question."

SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த இரண்டு விவாதங்களையும் முதல் தேதி அன்றைக்கு வைத்துக் கொள்ளலாமென்று சொல்லுகிறீர்கள். கடந்த ஒன்றரை மாத காலமாக கூட்டம் நடைபெற்று வருகிறது. இருந்தும் முதல் தேதிதான் எங்களுக்கு முதன் முதலாக கிடைக்கப்போகும் சர்க்கார் அலுவல் எடுத்துக்கொள்ளப் படாத நாள் (Non-official Day).

" அன்றைக்கும் இந்த இரண்டு அரை மணி விவாதத்திற்காக இருக்கக் கூடிய நான்கு மணியில் ஒரு மணி போய்விட்டால் பிறகு என்ன செய்வது என்று தான் தெரியவில்லை,"

MR. SPEAKER :—" பட்ஜெட் ஒன்று தான் சர்க்காரின் வேலை. அரை மணி நேர விவாதமும் உங்களுடைய வேலை தான். ஆகவே இந்த அரை மணி நேர விவாதத்தையும் non-official day-ல் வைத்துக் கொள்வதில் தவறு ஒன்றுமில்லை."

SRI S. RAMALINGAM :—" இந்த அரை மணி நேர விவாதத்தை அன்றைக்கு இரவு வைத்துக்கொள்ளலாம்."

SRI G. GOVINDAN :—" கனம் சபாநாயகர் அவர்களே, இரவு நேரத்தில் மாத்திரம் கூட்டம் நடத்தக்கூடாதென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்."

MR. SPEAKER.—" அன்றைக்கு இரவு கூட்டம் கிடையாது.

" We must also look to the convenience of hon. Members. We have been sitting for the last one and half months. I have no objection to have the discussion from 5 to 6 p.m."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" As a compromise I would suggest we will have the debate on these two questions for one hour from 4-30 p.m. to 5-30 p.m. on 1st of April."

MR. SPEAKER :—" I have allotted half an hour for the previous question and half an hour for this question on 1st of April. The timings will be from 4-30 p.m. to 5-30 p.m. for these two questions."